## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

ஊக்குபதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மை நிறுவனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று , உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

முகவராண்மையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, முகவராண்மையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

முகவராண்மையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் முகவராண்மையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல் .
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக

காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை மாத்திரம் அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு "முறையாக திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| நிதிப்பிரமாணம் 371(2) | செயல் நிமித்த உப கட்டு நிதியை பெறுகின்ற நிறைவேற்று அதிகாரிகளினால் அப் பணி முடிவடைந்த பின்னர் அச் செயல் நிமித்த உப கட்டு நிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தினால் 09 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா 237,400 ஆன உப கட்டு நிதியை தீர்ப்பதற்கு 34 நாட்கள் தொடக்க்ம் 75 நாட்கள் வரையான தாமதம் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | உடன்படுகின்றேன். குறிப்பிட்ட வேலைத் திட்டம் திட்டமிடப்பட்டு முற்பணம் பெறப்பட்டிருந்ததுடன் கொவிட் 19 காரணத்தினால் திட்டமிடப்பட்ட செயற்திட்டம் நடாத்தப்படுவதற்கு முடியாதிருந்தமை, முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களின் முற்பணங்களை தீர்ப்பதற்கு முன்னர் நிறுவனம் முடப்பட்டிருந்தமையால் (lock down காரணத்தினால்) ஊழியர்களின் தீர்ப்பனவுகள் தாமதனமானதால் இந் நிலை ஏற்பட்டது. எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமையைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் முற்பணங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு மீளாய்வு ரூபா 2,927,396 ஆன மிகை என்பதுடன் அதற்கொத்த முன்னைய வருடத்தின் மிகை ரூபா 717,811 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,209,585 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம் முன்னேற்றத்திற்கு ஏனைய வருமானம் ரூபா 2,209,585 ஆல் உயர்வடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் முடிக்கப்படாத மூலதன வேலைகளில் ஆராய்ச்சி உபகரணங்களின் கீழ் ரூபா 60,211,400 காணப்பட்டதுடன் இந்த ஆராய்ச்சி உபகரணங்கள் 2020 | இந்த உபகரணத்தின் செயற்பாடு முறையாகக் காணப்படுவதாக உறுதி செய்து கொள்வதற்கும் அதற்காக உபகரணத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து சரியான | ஆராய்ச்சி உபகரணங்களைச் செயற்படுத்துவதற்குத் தேவையான பயிற்சியளித்தல் மற்றும் அராய்ச்சி |

| | | |
|---|---|---|
| ஏப்ரல் 05 வரையில் நிறுவப்பட்டு முடிக்கப்பட வேண்டியிருந்தது. 2020 மார்ச் 15 வரையில் இந்த உபகரணங்கள் முகவராண்மைக்கு பெறப்பட்டிருந்ததுடன் இயந்திரங்களைச் செயற்படுத்துவதற்குத் தேவையான பயிற்சி அளித்தல் மற்றும் இயந்திரப் பாவனைக்குத் தேவையான ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக நிபுணத்துவச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக பல சந்தர்ப்பங்களில் கடிதங்கள் அனுப்புதல், நிகழ்நிலை (Online) முறைமையின் கீழ் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதற்கு மற்றும் அதற்கான கலந்துரையாடல்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் அப் பயிற்சி நடவடிக்கைகள் முடிக்கப்படாத காரணத்தினால் அவ்வுபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுத்தல் 2021 நவம்பர் 16 ஆந் திகதி வரையில் முடியாதிருந்தது. | பயிற்சியொன்றும் வழங்குநரால் வழங்கப்படல் வேண்டும். மேலும், உபகரணத்தின் ஆயுட்காலம், சரியான தரவுகளைப் பெறுவதற்கு அது அவசியம்.<br><br>இந்த இரு விடயங்களையும் இற்றை வரையில் பூரணப்படுத்துவதற்கு வழங்குநருக்கு முடியாதிருந்தது. அதனால் அதன் செயற்பாட்டினை உறுதிப்படுத்தல் மற்றும் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு SLADA நிறுவனத்திற்கு இன்னும் முடியாதிருந்தது.<br><br>இச் சிக்கல்களுக்கு அண்மையில் தீர்வு காண்பதற்காக இந்த உபகரணத்தின் செயலாற்றல் பரிசோதனை 2021 நவம்பர் 16 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டது.<br><br>செயற்பாடு உறுதிப்படுத்தப்படும் வரை உபகரணத்தின் உத்தரவாதக் காலம் ஆரம்பித்தல் மற்றும் உபகரணம் நிறுவனத்தால் பொறுப்பேற்றல் என்பன மேற்கொள்ளப்படவில்லை. | நடவடிக்கைகளுக்காகத் தேவையான நிபுணத்துவம் சேவைகளைத் திறம்படப் பெறுவதற்கும் மற்றும் முதலீட்டிற்கு உயர்ந்த பட்ச செயலாற்றலைப் பெறக் கூடியவாறு சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முகவராண்மையின் 2020 திசெம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 28 மற்றும் உள்ளபடியான ஊழியர்களின் எண்ணிக்கை 19 என்பதுடன் ஊழியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை 09 ஆகும். முகவராண்மையில் காணப்பட்ட கல்வி மற்றும் பரிசோதனை மற்றும் செயற்படுத்தல் மற்றும் அமுலாக்கல் பிரிவு 02 இல் காணப்பட்ட பணிப்பாளர் பதவி மற்றும் உதவிப் பணிப்பாளர் பதவி 2014 ஆம் வருடத்திலிருந்து வெற்றிடங்கள் 04 காணப்படுதலானது நிறுவனத்தின் செயலாற்றலுக்கு நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது | உடன்படுகின்றேன். கல்வி மற்றும் பரிசோதனை பிரிவின் பணிப்பாளர் பதவிக்காக நியமிக்கப்பட்டிருந்த மருத்துவ நிறுவனத்தின் அதிகாரி நிறுவனத்தின் நியமனத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. பணிப்பாளர் (அமுலாக்கல் மற்றும் செயற்படுத்தல்) பதவிக்கு ஆட்சேர்ப்பிற்காக 2014 ஆம் வருடத்திலிருந்து பல சந்தர்ப்பங்களில் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்ததுடன் அதற்காக திறமையான மற்றும் இயலுமை கொண்ட நபரை ஆட் சேர்ப்பதற்கு | வெற்றிடங்கள் காணப்படுகின்ற பதவிகளுக்காக பதவியணியினர் ஆட்சேர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| என்பது அவதானிக்கப்பட்டது. | தவறியிருந்ததால் அதன் ஆட்சேர்ப்பு நடைமுறை திருத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அப்போதும் பொருத்தமான நபர் ஒருவர் முன்வரவில்லை.<br><br>உதவிப் பணிப்பாளர் (கல்வி மற்றும் பரிசோதனை) மற்றும் உதவிப் பணிப்பாளர் (செயற்படுத்தல் மற்றும் அமுலாக்கல்) ஆகிய பதவிகள் இரண்டிற்குமாக மற்றும் அபிவிருத்தி அதிகாரி பதவிகள் இரண்டு மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் பதவி 2021 ஆம் வருடத்தின் முற்பகுதியில் ஆட்சேர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. நிறுவனத்திற்கு மூன்று வாகனங்கள் மட்டுமே காணப்படுவதால் மூன்று சாரதிகள் மட்டுமே ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். | |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தடைசெய்யப்பட்ட ஊக்கு மருந்துப் பரிசோதனைகளை தீவிரப்படுத்தல், அதிகளவிலான விளையாட்டுக்களை உள்ளடக்கும் வகையில் தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்துப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படல் மற்றும் தடை செய்யப்பட்ட பொருட்களைப் பயன்படுத்துவதால் ஏற்படக் கூடிய விளைவுகள் குறித்து விளையாட்டு சமூகத்தினரிடையே விழிப்புனர்வை ஏற்படுத்தலில் முன்னேற்றம் நூற்றுக்கு 0 வீதத்திலிருந்து நூற்றுக்கு 49 வீதம் வரையிலும் மற்றும் பராம்பரிய உள்ளூர் உணவு பானம், மருந்துகளில் தடை செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பாக ஆராய்தல் மற்றும் தகவல்கள் நாளது வரையாக்கப்படலின் முன்னேற்றம் நூற்றுக்கு 75 வீதத்திலிருந்து நூற்றுக்கு 100 வரையிலும் காணப்பட்டன. | உடன்படுகின்றேன். கொவிட் 19 தொற்று நோய் மற்றும் பணிப்பாளர் மற்றும் உதவிப் பணிப்பாளர் (கல்வி மற்றும் பரிசோதனை) பதவிகள் வெற்றிடங்களாக காணப்படுவதால் திட்டமிடப்பட்ட ஊக்கு மருந்துப் பரிசோதனை மற்றும் சமூக விழிப்புணர்வை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | நிலையேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |